# 19

# கலீபா உமர் றழியல்லாஹு அன்ஹு

" إِنَّ اللهَ جَعَلَ الْحَقَّ عَلَى لِسَانِ عُمَرَ وَقَلْبِهِ " (رواه الحاكم)

நிச்சயமாக அல்லாஹ் உமரின் உள்ளத்திலும் நாவிலும் சத்தியத்தை வைத்துள்ளான் (ஹாகிம்)

## கலீபா உமர் றழியல்லாஹு அன்ஹு

குறைஷியரின் கௌரவத்துக்குரியவராகக் கருதப்பட்ட உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கி.பி.580 களில் ''அதீ'' பரம்பரையில் பிறந்தார். எழுத வாசிக்கத் தெரிந்தவராகவும் மல்யுத்த வீரராகவும் திகழ்ந்த இவர் ஆரம்பத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களதும் இஸ்லாத்தினதும் முன்னணி எதிரிகளில் ஒருவராக காணப்பட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொல்வதுதான் மக்காவில் அமைதியை ஏற்படுத்தப் பொருத்தமான தீர்வு எனக் குறைஷியர் தீர்மானித்தபோது அதனை நிறைவேற்றச் சென்ற வேளையிலேயே நுபுவ்வத் 6 இல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

## ஆளுமைப் பண்புகள்

உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆளுமைப் பண்புகளுள் துணிவும் வீரமும் குறிப்பிடத்தக்கவையாகும். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமை முஸ்லிம்களுக்குப் புத்துணர்ச்சியையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியது. அதேவேளை குறைஷிக் காபிர்களுக்குப் பேரிடியாக அமைந்தது. உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபின் சற்றும் தாமதியாது ஒவ்வொரு

குறைஷித் தலைவரது வீட்டையும் தட்டி தான் முஸ்லிமாகி விட்டதைத் தெரிவித்தார். கஃபாவிலும் அதனைப் பிரகடனம் செய்ததோடு அங்கு பகிரங்கமாகத் தொழுகை நடாத்த வழிசெய்தார். இவற்றைக் கண்டு முஷ்ரிகுகள் ஆத்திரமடைந்த போதிலும் உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் வீரத்துக்கும் துணிவுக்கும் முன் எதனையும் செய்ய முன்வரவில்லை.

உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆலோசனைகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அங்கீகரித்து வஹீ அறிவிக்கப்பட்டுள்ளமை அவர்களின் பரந்த அறிவையும் விவேகத்தையும் காண்பிக்கின்றது.

கலீபா அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் அல்குர்ஆனை நூலுருப்படுத்திப் பாதுகாப்பதற்கு ஆலோசனை வழங்கியமை அவரது தூரநோக்கிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## கலீபாவாக நியமிக்கப்படல்

அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது மரணத்திற்கு முன்னரே உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கலீபாவாக நியமனம் செய்ய விரும்பினார்கள். அன்றைய சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த பல ஸஹாபாக்களைத் தனித்தனியாகவும் குழுக்களாகவும் அழைத்து கலந்தாலோசித்தார்கள். அனைவருமே உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் விடயத்தில் பூரண திருப்தியை வெளிப்படுத்தினர். அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களை அடுத்த கலீபாவாகப் பிரகடனப்படுத்தினார்கள். மக்களும் அதனை ஏகமானதாக ஏற்றுக் கொண்டனர். ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் பிறை 22 இல் உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கிலாபத்தைப் பொறுப்பேற்றார்கள்.

## பணிகளும் பங்களிப்புக்களும்

உரோம பாரஸீக வல்லரசுகளால் ஒடுக்கப்பட்டிருந்த மக்களை விடுவித்து அவர்களுக்கு சுபீட்சமான வாழ்வினை ஏற்படுத்துவதற்காக அபூபக்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கிலாபத் விரிவாக்க நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்தார். சிறந்த நிர்வாகிகளை ஆளுநர்களாக நியமனம் செய்து நிர்வாகப் பணிகளை ஒழுங்குபடுத்தினார். வித்தியாசமான வழிமுறைகளைக்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

கையாண்டு மக்கள் குறைகளை அறிந்து அவற்றை உடனுக்குடன் தீர்த்து வைத்தார். நேர்மையானதும் கண்டிப்பானதுமான இவர்களது நிர்வாக முறைமையால் வளமும், வலிமையும் பெற்றுக் காணப்பட்ட இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்வதற்கு அயல் தேச மக்களும் ஆர்வம் காட்டினர்.

கலீபா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சியில் இஸ்லாமிய அரசு பன்மடங்கு விரிவடைந்ததால் நிர்வாகத்தைத் திறம்பட மேற்கொள்ளப் புதிய கட்டமைப்புக்களை அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனடிப்படையில் பல புதிய ஒழுங்குகளை அறிமுகம் செய்தார்கள். அவற்றுள்

★ கலீபாவின் உரிமைகள், கடமைகள், மக்களோடு அவருக்கிருக்க வேண்டிய தொடர்புகள் போன்றவற்றிற்கு ஒழுங்குகளையும் வரையறைகளையும் ஏற்படுத்தியமை.

★ ஆளுநர் நியமனத்திற்கான ஒழுங்குகளையும் விதிகளையும் அறிமுகப்படுத்தி அவர்களது அதிகாரங்களையும் வரையறை செய்தமை.

★ நீதித்துறையினை சுயாதீனமாக இயங்க வைத்தமை.

★ அரசவரிகளை வசூலிப்பதற்காக அதிகாரிகளை நியமித்தமை.

★ நிர்வாகப் பணிகளை இலகுபடுத்துவதற்காக பிராந்திய ரீதியில் பல அலகுகளை ஏற்படுத்தி அவற்றுக்கு:-

- வாலி - ஆளுநர்
- காதிப் - தலைமைக் காரியதரிசி
- காதிபுத் தீவான் - இராணுவ காரியதரிசி
- ஸாஹிபுல் கறாஜ் - இறைவரி வசூலுக்கான அதிகாரி
- ஸாஹிபுல் அஹ்தாத் - பொலிஸ் அதிகாரி
- ஸாஹிபு பைதில் மால் - திறைசேரி செயலாளர்
- காழீ - தலைமை நீதிபதி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டமை.

★ பைதுல்மாலை ஸ்தாபித்து, ஸகாத், ஜிஸ்யா, கனீமத், கறாஜ், வாரிசற்றவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் போன்றவற்றினூடாக அதற்கான வருமான வழிகளை ஏற்படுத்தியமை.

★ ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவம் உருவாக்கப்பட்டமை.

★ இஸ்லாமிய வரலாற்றில் முதன்முதலாக தனித்துவமான நாணயமொன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டமை.

★ நகரங்கள் நிர்மாணம், சுகாதார சேவைகள், நீர்ப்பாசன வசதிகள் மேற்கொள்ளப்பட்டமை

★ ஹிஜ்ரி நாளேடு (கலண்டர்) அறிமுகம் செய்யப்பட்டமை

போன்றன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இவ்வாறு இன்னும் பல ஒழுங்கு முறைகளையும் சேவைகளையும் வழங்கிய கலீபா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் முழு மனித சமூகத்துக்கும் முன்மாதிரியான ஆட்சியை மேற்கொண்டார்கள். கலீபா உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சுமார் பத்தரை வருட ஆட்சியின் பின்னர் ஹிஜ்ரி 23 துல்ஹஜ் பிறை 26ல் அபூ லுஃலுஆ எனும் பாரஸீக மஜூஸியின் தாக்குதலால் படுகாயமுற்று வபாத்தானார்.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

۞ العَدِيّ ۞ الوَالِي ۞ الكاتِبُ ۞ كاتِبُ الدِّيْوانِ ۞ صَاحِبُ الأَحْدَادِ ۞ صَاحِبُ الخَرَاجِ
۞ صَاحِبُ بَيْتِ المَالِ ۞ القَاضِيْ ۞ الجِزْيَةُ ۞ الغَنِيْمَةُ ۞ الخَرَاجُ ۞ أَبُو لُؤْلُؤة

## பயிற்சி

1. உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆளுமை பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

2. உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின் முஸ்லிம்கள் புத்துணர்ச்சி பெற்றார்கள் என்பதைத் தெளிவுபடுத்துக.

3. உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் கலீபா தெரிவு பற்றிக் குறிப்பிடுக.

4. உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் நடந்த சீர்திருத்தங்கள் பற்றி எழுதுக.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக